கோயில் தேவைகளுக்கான
குடை, கொடி,
ஆலவட்டம், வாகுமாலை
என்பவற்றுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

மக்கள்! ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

பட்டு, பருத்திப் புடைவைகள்
மற்றும் றெடிமேட்
ஆடைகளுக்கும் சிறந்த
ஸ்தாபனம்

ஞானம்
ஆடையகம்

54,சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 27 திங்கட்கிழமை (10 – 04 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 134

சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என புலிகள் மறுப்பு

அரசின் விஷமத்தனமான பிரசாரம் குறித்தும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 10

பலாலி முகாமுக்கு அருகில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டதாக அரசு கூறும் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான ''புலிகளின் குரல்'' நேற்று இதனைத் தெரிவித்தது.

இடைக்காடு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுவரும் விஷமத்தனமான பிரச்சாரத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசு இவ்வாறான ஒரு பிரச்சாரத்தை சர்வதேச அளவில் மேற்கொண்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட மோதல்தவிர்ப்பு உடன்பாட்டை விடுதலைப் புலிகள் மிகவும் கவனமாக கடைப்பிடித்து வருகின்றனர். இதுவரை எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைத் தாம் மீறவில்லை எனவும் உறுதிப்படுத்துகின்றனர்.

ஸ்ரீலங்கா படையினரே இதற்கு முன்னர் பல தடவைகள் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை மீறியுள்ளனர்.

ஸ்ரீலங்காப் பொலிஸாரின் அடாவடித்தனங்களால் விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் கிழக்கு மாகாணத்தில் அண்மையில் 'சயனைட்' அருந்தி வீரச்சாவடைந்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் சில சந்தர்ப்பங்களில் போராளிகளைக் கைது செய்யும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்புப் பகுதியில் தொடர்ந்தும்சுற்றிவளைப்புக்களும் மக்கள் கைது செய்யப்படுவதும் இடம்பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணக் கடற்பிராந்தியத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் மீனவர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

காட்டுக்கு தீ வைப்பு

கொழும்பு, ஏப். 10

மட்டக்களப்பு மாவட்டம் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் உள்ள காடு ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்று இந்த காட்டுப் பிரதேசத்திற்குள் சென்று வானத்தை நோக்கிச் சுட்டதாகவும்—

பின்னர் காட்டுக்குத் தீ வைத்துவிட்டுச் சென்றதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்படுவதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-7)

ஹெலிகள் அடிக்கடி பறந்தன

சண்டிலிப்பாய், ஏப். 10

வலிகாமம் வடக்கு வலிகாமம் மேற்கு வான் பகுதிகளில் நேற்று ஞாயிற்றுக்கிழமைஹெலிக்கொப்டர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்பட்டது.

இப்பகுதிகளில் ஹெலிகள் அடிக்கடி தாழப் பறந்து தீவிர ரோந்தில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (அ-135)

நான்காவது கட்டத்தில் - இன்று

காலையும் மாலையும் இரு சுற்றுப் பேச்சுக்கள்

தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் மூன்று மாத கால இடைவெளியின் பின்னர் நடைபெறவிருக்கும் இன்றைய நான்காவது பேச்சுவார்த்தை — காலையிலும் மாலையிலுமாக இரண்டு சுற்றுக்கள் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் முன்வைத்த நான்கு கோரிக்கைகளில் இதுவரை தீர்க்கப்படாத விடயங்களும் இன்றைய பேச்சுவார்த்தையின் போது ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய பேச்சுக்களில் கலந்து கொள்ளும் ஆறு பேர் அடங்கிய அரசாங்கத் தூதுக்குழு ஹெலிக்கொப்டர் மூலம் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கிறது.

இன்று காலை 7 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து விசேட விமான மூலம் பலாலி வந்து சேரும் அரச தூதுக்குழுவினர் அங்கு இருந்து ஹெலி மூலம் சுமார் 8–45 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்வர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர் அரசகுழுவினர் மாலையே கொழும்பு திரும்பஏற்பாடாகியுள்ளதாகத் தெரியவந்தது.

ஜனாதிபதியின் செயலாளர் குசும் சிறி பாலபட்டபெண்டி தலைமையில் வரும் இக்குழுவில் அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் அதி. வண. கென்னத பெர்னாண்டோ, கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி ஜெயதேவ உயன்கொட, 'மேர்ஜ்'மனித உரிமைக்குழு தலைவா சாள்ஸ் அபயசேகரா, இராணுவ அதிகாரி பிரிகேடியர் சறி பீரிஸ் கடற்படை அதிகாரி கப்டன் ராஜரத்தின ஆகியோர் இடம்பெறவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ

(6 ஆம் பக்கம் பார்க்க)

காஸாவில் கார் குண்டு வெடிப்பு!

ஜெருசலேம், ஏப் 10

பலஸ்தீன சுயாட்சிப் பிரதேசமான காஸாவில் நடந்த கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஆறு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் அதிகமானோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

எதிர்கட்சி எம்.பிக்களுடன் யாழ்.மாணவர் குழு சந்திப்பு

நாடாளுமன்றில இடம்பெற்றது

கொழும்பு, ஏப். 10

பல்கலைக் கழக வெட்டுப் புள்ளியினால் பாதிக்கப்பட்ட யாழ், மாவட்ட மாணவர்களின் சார்பில் கொழும்பு சென்ற மாணவர் பிரதிநிதிகள் குழு கடந்த 6 ஆம் திகதி எதிர்க் கட்சி எம். பிக்களை நாடாளுமன்றத்தில் சந்தித்தது.

யுத்த சூழ்நிலையில்,மிகவும் சிரமப்பட்டு படித்தும், யாழ் மாணவர்கள் பலரும் தமது உயர் படிப்பைத் தொடர முடியாது உள்ளனர்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சீ ஈ. சாதாரண தர

பரீட்சை முடிவுகள் நாளை கொழும்பில் வெளியாகும்

கொழும்பு, ஏப்ரல். 10

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ ஈ சதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் வெளியிடப்படும்.

பரீட்சைஆணையாளர் அலுவலகம் இதனை அறிவித்துள்ளது. (ஐ-5)

விறகு எடுக்க சென்ற இருவர் படையினரிடம் சிக்கினர்

வளலாய்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப் 10

விறகு எடுத்து வருவதற்காக வலலாய்ப் பகுதிக்குச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது

வளலாயில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் கந்தையா நடேசு (வயது 42) அவரது மருமகன் இரத்தினம் வண்ணன் (வயது 27) ஆகிய இருவருமே படையினரிடம் பிடிபட்டவர்களாவர்.

இவர்களுடன் சென்ற வேறு இருவர் படையினரைக் கண்டதும் ஓடித் தப்பி விட்டனர்.

13 ஆயிரத்து 200 பீப்பாய் குண்டுகள் வடபகுதி மீது போடப்பட்டன!

ஆளும்கட்சி எம். பி நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

1983 தொடக்கம் 1992 ஆம் ஆண்டு வரை வடபகுதியில் 13ஆயிரத்து 200 பீப்பாய்க்குண்டுகள் போடப்பட்டன.

ஒவ்வொரு பீப்பாய்க் குண்டும் 300 கிலோகிறாம் எடை கொண்டதாகும்.

இதனை முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தெரிவித்ததாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. நந்தா குணசிங்கா கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்

காமினி திஸநாயக்கா மற்றும் ரஞ்சன் விஜேரத்தின ஆகியோரைக் கொல்லப் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் ஒவ்வொன்றும் 5 கிலோ கிறாம் எடையானவையாகும். 5 கிலோ குண்டே இவ்வளவு அழிவுகளை ஏற்படுத்தியிருந்தால் 300 கிலோ எடையான குண்டுகள் வடபகுதியில் எவ்வளவு பேரழிவை ஏற்படுத்தியிருக்க முடியும் என்பதை கற்பனை செய்து பார்க்கத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-ள)

படை நிலைகள் அருகே வருவோரை கண்டதும் சுடுவதற்கு உத்தரவு!

கொழும்பு. ஏப். 10

படையினரின் நிலைகளுக்கு அருகில் வருவோரை கண்டதும் சுடுவதற்கு படையினருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலாலி முகாமுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படையினர் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜன்சி ஒன்று தெரிவித்தது.

தற்போது அமுலில் உள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின்படி தத்தமது நிலைகளில் இருந்து நூறு மீற்றர் பிரதேசத்துக்குள் இருதரப்பினரும் நடமாட இணக்கம் காணப்பட்டுள்ளதும்—

இந்த நூறு மீற்றர் எல்லைகளுக்கு இடையிலான நானூறு மீற்றர் பிரதேசம் எவரும் நடமாடாத பகுதியாக அறிவிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே. [ஐ-7]

பூநகரி முகாமுக்கு பலத்த பாதுகாப்பு! தெற்கிலிருந்து புதிய துருப்புக்கள்!!

பூநகரி இராணுவ முகாமில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரில்சுமார் 2ஆயிரம்பேர் வவுனியாவுக்கு மாற்றப் பட்டுள்ளனர் என்றும்—

தெற்கில் இருந்து புதிதாக 2 ஆயிரம் துருப்புக்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

பூநகரி படை முகாமின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காகவே விசேடபடையணியைச் சேர்ந்த துருப்புக்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறது

பூநகரியில் இருந்து மாற்றப்பட்ட 2 ஆயிரம் படையினரும் வவுனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ–3)

ஜே.வி.பியை மீண்டும் கட்டி எழுப்ப இளைஞரை அணிதிரள அறைகூவல்

புரட்சியின் நினைவுக் கூட்டத்தில் விடுக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 10

றோஹண விஜேவீர, உபதிஸ்ஸ கமநாயக்க போன்ற தியாகிகளினது இரத்தத்தால் வளர்க்கப்பட்ட எமது மக்கள் விடுதலை முன்னணியை (ஜே. வி.பி.) மீண்டும் பலம் கொண்ட சக்தியாக கட்டியெழுப்ப இளைஞர்கள் அணிதிரள வேண்டும். நாம் இன்னும் அழிந்துவிடவில்லை.

— ஜே. வி. பி யின் முக்கிய உறுப்பினரான விமலசிறி கம்லத் என்ற விமல் வீரவன்ச இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார்.

கடந்த புதன் கிழமை, விகாரமகாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் 'ஜே. வி.பி. ஏப்ரல் கிளர்ச்சி' யின் 24 ஆவது நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

கட்சியின் மூத்த உறுப்பினரான பியசேன சேனநாயக்க என்றவயோதிபரின் தலைமையில் நடந்த அக் கூட்டத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடவுச்சீட்டு மோசடியில் கனடா தூதரக யுவதி கைது

கொழும்பு, ஏப். 10

கொழும்பில் உள்ள கனடா தூதரகத்தில் கடமையாற்றும் பெண் ஒருவர் கனேடிய கடவுச்சீட்டில் மோசடி செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

கைருன் நஸ்லியா சகாப்டீன் [வயது 35] என்ற பெண்ணே குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்,

கனேடிய கடவுச்சீட்டில் மோசடி செய்து கனடாவுக்குச் சென்ற அவர் அங்கு தஞ்சம் கோரி விடுத்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என கனேடிய பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

பாதுகாப்பு வழங்ககோரி ரெலோ தலைவர் கடிதம்

கொழும்பு, ஏப். 10

கிழக்கு மாகாணத்தில் ரெலோ இயக்க உறுப்பினர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு அந்த இயக்கத்தின் தலைவர் சிவபாதம் வினோதலிங்கம் (குகன்சாம்) பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தையை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

கிழக்கில் ரெலோ உறுப்பினர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் பலஇடம் பெறுகின்றன.

செங்கலடி கிராமோதய சபை அங்கத்தவரான எமது உறுப்பினரை விடுதலைப்புலிகள் சுட்டுக்காயப்படுத்தி உள்ளனர்.

எமது இயக்க முக்கிய அங்கத்தவரின் சகோதரரான கோகுலராஜா என்பவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரையம்பதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளார்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் அத்துமீறல் செயல்கள் அதிகரித்துள்ளன.

ஆகையால், இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்தக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன் ஆலையை இயக்க புதிய யோசனை!

ஊழியர் எதிர்ப்பால கைவிடப்பட்டது

கொழும்பு, ஏப். 10

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களை அங்குள்ள விடுதிகளில் தங்க வைத்து, தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு கூட்டுத்தாபன தலைமைபீடம் ஆலோசனை தெரிவித்ததாக லங்கா சிமெந்து நிறுவன தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் உயர் அதிகாரிகளை சந்தித்து சம்பள நிலுவை, சம்பள உயர்வு குறித்து பேச்சு நடத்தினர்.

அப்போது இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டதாம்.

ஊழியர்கள் விடுதிகளில் தங்கி இருந்து வேலைசெய்ய சம்மதிக்கும் பட்சத்தில் அவர்கள் மாதாந்தம் தமதுவீடுகளுக்கு சென்று வர அனுமதி வழங்கப்படும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைகளுக்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவிக்காததால் அந்த யோசனை கைவிடப்பட்டதாகவும் அறியவந்தது. (ஐ-50)

முச்சந்தி முரளி

இதெல்லாம் [illegible] லின்ற சாதனைகள் கண்டி யரோ !

கல்வயல் - பெருங்குளம்
அருள்மிகு
அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய
வருடாந்த மஹோற்சவம்

5ஆம் நாள் உற்சவம்

விநாயக அடியார்களே!

இன்று (10 — 04 — 1995) திங்கட்கிழமை

★ வழமையான பகல் வேளை திருவிழாவுடன்
★ இரவு விஷேட விழா நிகழ்வுகளாக மாலை 5-00 மணிக்கு, தவில், நாதஸ்வர இசைக் கச்சேரி நிகழும்.

நிகழ்த்த இருப்பவர்கள்:

✶ *நாதஸ்வரம்;*
''இசைப்பேரறிஞர்''
மு. பஞ்சாபிகேசன்
''நாதஸ்வர இசைச்செல்வன்''
மு. ப. நாகேந்திரன்
''தவில் வித்துவான்கள்''
S S. முருகையா.
S. A. சந்திரமோகன்

✶ *தவில்;*
காலஞ்சென்ற தவில் மேதை
N R சின்னராஜா
அவர்களின் புதல்வர்கள்
N. R. S. ரவீந்திரன்
N. R. S. சுதாகரன்

✶ *நாதஸ்வரம்:*
'நாதஸ்வர வித்துவான்கள்''
A. முருகானந்தம்
N. R சந்தானகிருஷ்ணன்

★ எம்பெருமான் வீதிவலம் வரும்போது விஷேட தவில், நாதஸ்வர கச்சேரி இடம்பெற்று
★ அதனைத் தொடர்ந்து பாரதி சனசமூக நிலையத்தின் ஆதரவில் கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்களின் தெய்வீகப் பேருரையின் தொடர்ச்சி நிகழும்.
★ அடுத்து பிரபல தவில் - நாதஸ்வர மேதைகளின் ஒருங்கிணைந்த மேடைக்கச்சேரி இடம்பெறும்.

✶ *நிறைவாக:*
''வில்லிசைப் புலவர்'' 'கலாவினோதன்'
அச்சுவேலியூர்
சின்னமணி வில்லிசைக் குழுவினரின்
"குமரனை மணந்த குறத்தி"
வில்லிசை இடம்பெறும்.

அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து
விநாயகப் பெருமானின் அருள் பெறுக
நன்றி:

5ஆம் நாள் உற்சவ விழா உபயகாரர்கள்.
பெருங்குளம், சாவகச்சேரி.

விழா சிறப்பிக்க வாழ்த்துபவர்:
"அருள்முருகன் நகை அகம்"
96/1, சந்தோஷம் தெரு (கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.
கிளை:
''சிவா நகை மாடம்''
யாழ். வீதி (கண்டி வீதி),
சாவகச்சேரி.
(36150)

6-ம் ஆண்டு நினைவஞ்சலி

மரியாம்பிள்ளை செல்வத்துரை
(இளைப்பாறிய M. S officer)
யாழ். தபாற்கந்தோர்)

இறப்பு: 10 — 04 — 1989

ஐயா நீங்கள் இவ்வுலகை விட்டுப்பிரிந்தும் நாங்கள் ஒவ்வொரு நிமிடமும் உங்களை நினைத்து வேதனைப்படுகின்றோம் உங்களோடு வேலை செய்த உத்தியோகஸ்தர்கள் நண்பர்கள் இன்றைக்கும் உங்களோடு அன்புள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

உங்கள் நினைவில் வாடும்
மனைவி பிள்ளைகள்.

40/5, ரெம்பிள்றோட்,
யாழ்ப்பாணம்.
(36107)

சிவமயம் ஓம் சக்திமயம்
மானிப்பாய் சோதி வேம்படி
காளி அம்மன் தேவஸ்தானம்
பங்குனித் திங்கள் திருவிழா

10 - 04 - 95 காலை அம்பாளுக்கு விஷேட அபிஷேகமும், தொடர்ந்து அன்னதானமும், மாலை, 6-00 மணிக்கு தெய்வீக நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

சொற்பொழிவு:

''தேவி முகூர்த்தம்''

விரிவுரையாளர்: திரு. அ. குமாரவேல் B A

"இன்னிசை விருந்து"

பாட்டு: கலைமணி, பொன். தெய்வேந்திரன்
வயலின்; பிரம்ம ஸ்ரீ மோகன் சர்மா
மிருதங்கம்: செல்வன் மதிரூபன்

BITSMANS கல்வி நிறுவனம்
மானிப்பாய்.
[சி-938]

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கல்விக் கோட்டம்
பொதுச் சபைக் கூட்ட
அறிவித்தல்

காலம்: **12 — 04 — 1995** புதன்கிழமை
காலை 10-00 மணி

இடம்: புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்
(எழிலகம் முன்பாக)

சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,

செயலாளர்,
யாழ் கோட்டம்.

[சி-940]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

மக்களைக் காப்பாற்றும் போது அமரராகிய இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின்

முன்னைய உப தலைவர்
திரு. கந்தையா புவனேந்திரன்
அவர்கள் நினைவாக

இ செ. ச. யாழ் கிளை தலைமையகத்தில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

புவனேந்திரன் நினைவுப் பேருரை

பேருரை நிகழ்த்துபவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
[தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

விடயம்:
✶ சேவை இன்றைய தேவை ✶
காலம்:
10 - 04 - 1995 பி. ப. 3-00 மணி

★ அனைவரும் அழைக்கப்படுகின்றனர். ★
— கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
07-04-95
[சி-924]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில்:
22
—
12
—
1942

ஆண்டவன் அடியில்:
12
—
03
—
1995

அமரர் குப்புசாமி முருகையா
[உரிமையாளர்: லெட்சுமி பவான், புன்னாலைக்கட்டுவன், ஆரியபவான் கோண்டாவில்.]

திதி: 11-4-1995 செவ்வாய்க்கிழமை

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து 12-3-95அன்று எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கி சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கு. முருகையா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 11-4-95 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம். தனிப்பட்ட முறையில் அழைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

ஆறாத்துயரில் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.

வசந்தி வீதி,
ஊரெழு கிழக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஏப். 10

கோப்பாய்தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, பாடசாலை அதிபர் திரு க பூபாலசிங்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். யாழ். வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(ஐ-5)

ஈ.பி. ஆர்.எல்.எப் உறுப்பினர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 10

முன்னாள் ஈ.பி ஆர்.எல். எப் உறுப்பினர் தியாகராசா ஜெயராசா (ஜெயன்) என்பவர் கடந்த வியாழன் இரவு பழுகாமத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

கற்பித்தல் செயலமர்வு

தென்மராட்சி கோட்ட — செயன்முறைக் கற்றல் — கற்பித்தல் கருமத் தொடர் அபிவிருத்திக்கான செயலமர்வு இன்று திங்கட்கிழமை முதல் புதன்கிழமை வரை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் காலை 8-30 மணிமுதல் மாலை 4-30 மணி வரை இடம்பெறும்.

சகல பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கும் "அனைத்து ஆசிரியர்களையும் இச்செயலமர்வில்" கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது

ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரையான ஆசிரியர்கள் தம்முடன் ஆசிரியர் வழிகாட்டிகளை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-14)

கிழங்கு அறுவடைகாலம் முடிவடையும் நிலையில்
சந்தையில் விலை உயர்வு

யாழ்ப்பாணம் ஏப் 10

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அறுவடை முடிவுறும் தறுவாயில் இருப்பதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இதுவரை 95 சதவீத உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

அறுவடை. முடியும் தறுவாயில் இருப்பதால் உருளைக்கிழங்கின் விலை சந்தையில் திடீரென்று உயர்ந்துள்ளது.

தற்போது சந்தையில் உருளைக்கிழங்கு கிலோ 40 ரூபா முதல் 50 ரூபா வரை விற்கப் படுகிறது.

அறுவடை உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் கிழங்கு கிலோ 10 ரூபா முதல் 15 ரூபா வரை விற்கப்பட்டது தெரிந்ததே [இ-17]

கொழும்பில் இருந்து
மண்வெட்டிகள் எடுத்துவர கூட்டுறவுச்சங்கம் முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 10

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் மண்வெட்டிகளை தருவித்து விவசாயிகளுக்கு வழங்கவுள்ளது

மண்வெட்டி தேவைப்படும் விவசாயிகள் அதற்கான முற்பணத்தைச் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(ஐ-17)

இலங்கை வெற்றி

சார்ஜா, ஏப். 10

கடந்த வாரம் சார்ஜாவில் நடந்த ஆசியக் கிண்ணத்துக்கான ஒருநாள்மட்டுப் படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை 107 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இலங்கை அணி 49. 9 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷ் அணி 44 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணியின் சார்பில் முத்தையா முரளிதரன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(இ-7)

இலங்கை வங்கி கிளைகளில் வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப் 10

யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கியின் மேல் தரக் கிளை தவிர்ந்த யாழ். மாவட்டத்திலுள்ள ஏனைய இலங்கை வங்கிக் கிளைகளில் தற்போதைய சூழ் நிலையில் வேலை செய்வதற்கு 37 வெற்றிடங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் வங்கி உத்தியோகத்தர் தரத்தில் 6வெற்றிடங்களும், லிகிதர் தரத்தில் 16 வெற்றிடங்களும், தட்டெழுத்தாளர் தரத்தில் 7வெற்றிடங்களும் அலுவலக உதவியாளர் தரத்தில் 8 வெற்றிடங்களும் உள்ளன என்று இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் காரியாலயத்தினால் மேற் கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

[இ-4]

படைப்பு மூலம் தம் கிராமத்துக்கு இலக்கிய அந்தஸ்து வழங்கினார்
டானியல் அன்ரனி நினைவுக் கூட்டத்தில் உரை

குருநகர், ஏப். 10

''மறைந்த எழுத்தாளர் டானியல் அன்ரனி தனது இலக்கிய படைப்புகள் மூலமாக நாவாந்துறை கிராமத்திற்கு இலக்கிய அந்தஸ்தை தந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் கலாநிதி சோ. கிருஸ்ணராஜா மேற்கண்டவாறு கூறினார்''.

நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக முத்தமிழ் மன்ற அரங்கில் நடைபெற்ற முதலாம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்து பேசுகையில் அவர் இவ்விதம் தெரிவித்தார்.

சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின்சார்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நினைவு தினக்கூட்டமும் ''மனிதம் மரணிக்காதமனிதன்' நினைவு நூல் வெளியீடும் சனசமூக நிலையத் தலைவர் திரு ச.மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றன.

கலாநிதி சோ. கிருஸ்ணராஜா தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

'நாவாந்துறை கிராமத்தையும், மக்களையும் நேசித்த டானியல் அன்ரனி அதே அளவுக்கு தமிழீழ மக்களையும் அதற்கும் மேலாக உலக மக்கள் அனைவரையும் நேசித்தார்.

மக்கள் அனைவரும் அடக்கு ஒடுக்குதலில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற இலட்சிய நோக்கத்திற்காகவே தனது பேனாவை வழிநடத்திய எழுத்தாளர் அவர்.'

இவ்வாறு அவர் கூறினார்.

''மனிதம் மரணிக்காத மனிதன்'' நினைவு நூல் வெளியீட்டுரையை அருட் திரு ம. ஸ்ரீபன் அடிகள் நிகழ்த்தினார்.

திருவாளர்கள் எஸ். ஜி. கணேசவேல், கே. ஆர். டேவிட், கவிஞர்கள் நாவண்ணன், நல்லை அமிழ்தன் ஆகியோர் நினைவுரைகளையும், கவிதாஞ்சலிகளையும் வழங்கினர்.

உதைபந்தாட்டம் வலைப் பந்தாட்டம், நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளும் டானியல் அன்ரனியின் ஓராமாண்டு நினைவாக நடைபெற்றன.

திரு. டானியல் சௌந்திரன் நன்றி கூறினார்.

UNIVERSITY OF
JAFFNA, SRI LANKA.
Master of Science In Biotechnology.

Applications will be entertained by me upto 15-05-1995 from suitable qualified persons who wish to register for the Degree of Master of Science in Biotechnology

''Graduates in chemical, biological, medical, dental, veterinary, agricultural and engineering science will be considered. Forward application with biodata All applicants will be required to sit for a qualifing examination and a viva. Address correspondance to Registrar, University of Jaffna.''

– Registrar
University of Jaffna.
1995 - 04 - 05
[C/921]

4-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
10
—
11
—
1925

இறப்பு:
10
—
04
—
1991

அமரர் ஆறுமுகம் சின்னத்துரை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நீங்கள் மறைந்து ஆண்டுகள்
நான்கு சென்றதையா ஆனால்
நித்தம் எம்மின் நீர் நிறைந்து
நிற்கின்றீர் வாடாமலராக
துன்பத்தில் உம்மை நினைவு கூரும்

குடும்பத்தினர்

''மலர் வாசா''
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.
(36154)

ஜெயலலிதாவின் பிறந்த நாளுக்கு

''ஜே'' வடிவில் குளங்கள் தமிழகத்தில் நிறுவப்படும்

தீமிதிப்பு வைபவத்துக்கும் ஏற்பாடு

சென்னை, ஏப். 10

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் 47 ஆவது பிறந்த நாளை ஒட்டி அவரைக் கௌரவிப்பதற்காக தமிழகத்தில் 47 இடங்களில் குளங்கள் வெட்டப்பட உள்ளன.

முதலமைச்சரின் பெயரில் முதல் எழுத்தான ''ஜே'' எழுத்தின் வடிவத்தில் குளங்கள் அமைக்கப் படும்.

இதேவேளை —

பிரமாண்டமான தீமிதிப்பு வைபவம் ஒன்றும் முதல்வரின் பிறந்த தினத்தன்று இடம்பெறவுள்ளது.

முதல்வர் ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் 23 அடி நீளமான எரியும் தணலில் தீமிதிப்புச் செய்வர்.

இதற்கான முன் ஏற்பாடுகளை போக்குவரத்து அமைச்சர் செங்கோட்டையன் செய்து வருகிறார். [ஐ-5]

அரச அலுவலகங்களை கண்காணிக்க குழுக்கள்

ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 10

அரசதுறை வேலைத் தலங்களை கண்காணிக்க விழிப்புணர்வுக்குழுக்களை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்துள்ளார்.

வீண் விரயம், நிர்வாகத் திறமையின்மை, குறிப்பாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் திறமையீனம் ஆகியவற்றை இல்லாமற் செய்யும் வகையில் அடிமட்டங்களில் இந்த விழிப்புணர்வுக் குழுக்கள் அமைக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ-7)

பொலீஸ் குழு திடீர் சோதனை!

வர்த்தகரின் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு!!

கொழும்பு, ஏப் 10

பத்தேகம பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிமருந்தையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

அங்கிருந்து ஒரு கிலோ கஞ்சா போதைப் பொருளும் மீட்கப்பட்டது.

தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து பத்தேகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.எம்.டி பிரேமதிலக தலைமையிலான பொலீஸ் குழு ஜெகத் எக்கநாயக்கா என்ற அந்த வர்த்தகரின் வீட்டில் திடீர் சோதனை நடத்தியது.

சம்பந்தப்பட்ட வர்த்தகரும் அவரது தாயாரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். (ஐ-4)

யாழ். மாவட்டத்துக்கு

பொதுசன உதவிப்பணம் வழங்க நிதி அதிகரிப்பு

வலிகாமம் மேற்கு, ஏப் 10

யாழ். மாவட்டத்துக்கு இந்த வருடத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கத் தேவையான நிதியை வடக்கு கிழக்கு மாகாணசபை அதிகரித்துள்ளது.

அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு சென்று திரும்பிய யாழ். மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தமது பிரதேச செயலக பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப்பணத்தை வழங்கத் தேவைப்படும் நிதிக்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் விண்ணப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தெற்கில் ஆயுதக் குழுக்கள்: தடுக்க பொலீஸார் ஏற்பாடு

கொழும்பு, ஏப். 10

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள ஆயுதக் குழுக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக தங்காலைப் பொலீஸ் பிரிவில் பல இடங்களில் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில் 47 கொள்ளைச் சம்பவங்களுக்கு இவ்வாயுதக் குழுக்களே பொறுப்பு என்று தங்காலை பொலீஸார் தெரிவித்தனர்.

புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் ஜே.வி.பி உறுப்பினர்கள் சிலரே இவ்வாயுதக் குழுக்களை அமைத்து செயற்படுத்தி வருகின்றனர் என்று பொலீஸ்பேச்சாளர் தெரிவித்தார்.

தங்காலை, பெலியத்த, வீரக்கெட்டியாவ ஆகிய பகுதிகளில் மூன்று ஆயுதக்குழுக்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளன என்றும் —

இன்னும் மூன்று குழுக்கள் விரைவில் கைது செய்யப்படும் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார். [ஐ-3]

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில்

அரசின் தயக்கம் குறித்து மக்கள் சந்தேகம் கொள்வதில் தவறில்லை

பிரதி அமைச்சர் சந்திரசேகரன் கூறுகிறார்

கொழும்பு, ஏப் 10

''ஒரு சிறு பிரச்சினையான சிறீபாத கல்வியியல் கல்லூரி விவகாரத்தை தீர்ப்பதற்கே அரசு தயக்கம் காட்டும் போது வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி மக்கள் ஏன் சந்தேகம் கொள்ளமாட்டார்கள்?''

— இவ்வாறு கேள்வி எழுப்பினார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், தோட்டத்துறை வீடமைப்பு பொதுவசதிகள் பிரதி அமைச்சருமான திரு. பெ. சந்திரசேகரன்

கடந்த 6ஆம் திகதி அவர் தமது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

சிறீபாத கல்வியியல் கல்லூரி பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும்.

அவ்வாறு ஏற்படாத பட்சத்தில் அரசுக்கு நாம் அளித்து வரும் ஆதரவை மறுபரிசிலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அரசுடன் போலியான ஐக்கியமும், உறவும் எமக்கு அவசியமில்லை என்றார். (ஐ-5 3)

கிளிநொச்சி விவசாயபீட

விவசாயமாணி பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஏப். 10

கிளிநொச்சியில் இயங்கும் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் முதல் தொகுதி மாணவர்களின் விவசாயமாணிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இரண்டாம் வகுப்பு—மேற்பிரிவில் 5 பேரும், கீழ் பிரிவில் 14 பேரும் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

மேற்பிரிவு

எம். கலைவாணி, எஸ். தர்மினி, எஸ். வசந்தரூபா, எஸ் சுந்தரேஸ்வரன், என். ராஜவிசாகன்

கீழ்ப்பிரிவு

எஸ். ஈஸ்வரானந்தம், என் ஜமுனா ஜயந்தி, எம். ஜோய்றேஸ், எஸ். மக்ஸ்வெல். ரி. குமுதினி. என். சாந்தினி, வீ. சுரேஷ்குமார், கே. வடிவழகன் எம் விக்னேஸ்வரா, வீ. கார்த்திகேயன், பி. சற்குணநாதன், ஜீ சுகன்யா, எஸ். நிறைநிதி, பி. நெடுமாறன். [ஐ-14]

சாரதாசமிதியின் வெள்ளிவிழா போட்டிகள்

யாழ்ப்பாணம் ஏப். 8

கொழும்பு ஸ்ரீ சாரதா சமிதியின் வெள்ளி விழாவை முன்னிட்டு பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம் மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துடன் தொடர்பு கொள்ளலாம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு 30 கோடி ரூபா நிதி பற்றாக்குறை

கொழும்பு, ஏப் 10

வடக்கு — கிழக்கு மாகாண சபை எதிர் நோக்கியுள்ள நிதிப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு முப்பது கோடி ரூபா தேவை என்று ஆளுநர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் அவர் இதற்கான கோரிக்கையை விடுத்தார்.

இம் மகாநாட்டிற்கு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தலைமை வகித்தார்.

குறிப்பிட்ட பணத்தை நாடாளுமன்றத்தில் குறை நிரப்பு பிரேரணை மூலம் பெற முடியாமையினால் வெளிநாட்டு உதவிகளிலிருந்தே பெறவேண்டும் என்று பேராசிரியர் பீரிஸ் அங்கு தெரிவித்தார். [ஐ-14]

வாசகரை பரபரப்பில் ஆழ்த்திய

இந்துஸ்தான் டைம்ஸின் முட்டாள் தினச் செய்தி

புதுடில்லி, ஏப். 10

சூழல் அசுத்தத்தில் இருந்து பாதுகாப்பதற்காக ஆக்ராவில் உள்ள உலக அதிசயங்களின் ஒன்றான தாஜ்மஹாலை வேறு இடத்துக்கு அப்புறப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இருந்து வெளிவரும் ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை கடந்த முதலாம் திகதி இவ்வாறு செய்தி வெளியிட்டு வாசகர்களை பரபரப்பில் ஆழ்த்தியது.

''தாஜ் இடம் மாற்றப்படப் போகிறது'' என்ற தலைப்பில், அப் பத்திரிகையின் வர்ணப் பதிப்பு பக்கத்தில் அரைவாசிப் பகுதிக்கு இந்த 'முக்கிய செய்தி' பிரசுரிக்கப்பட்டது.

ஆக்ராவில் உள்ள இந்த ''காதல் நினைவுச் சின்னம்'' பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டு உள்ளது.

17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தாஜ்மஹால் தற்போது உத்தரப் பிரதேசத்தில் உள்ள, சூழல் பாதிப்புகள் அற்ற இடம் ஒன்றுக்கு மாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஏப்ரல் முதலாம் திகதி ''உலக முட்டாள்கள்'' தினம் என்பதை அறிந்த பின்னரே பரபரப்பான அந்தச் செய்தியில் உண்மை இல்லை என்பதை வாசகர்களால் தெரிந்து கொள்ள முடிந்தது. [ஐ-5]

'வீஸா அக்கா' எனப்படும் பெண் முகவர் கைதானார்

கொழும்பு, ஏப். 10

வெளிநாடு செல்பவர்களுக்கு போலி விஸாக்களை வழங்கி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ''விஸா அக்கா'' என்று அழைக்கப்படும் தமிழ்ப் பெண் ஒருவருக்கு நீர்கொழும்பு நீதிவான் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இப்பெண், முகவர் நிலையம் ஒன்றை நடத்தி வந்தார் என்றும் — லண்டனுக்கு செல்வதற்காக போலி விஸாவை ஒருவருக்கு வழங்கிய போது இவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

மீனவர் தாக்கப்படும் சம்பவங்கள்:

உயர் மட்ட மாநாட்டில் பேசி முடிவு எடுக்கப்படும்

இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர் மீது நடத்தும் தாக்குதல்களை நிறுத்தும் நோக்குடன் இருநாட்டு அரச அதிகாரிகள் பங்குபற்றும் உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் நடைபெற விருப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவங்கள் தொடருவதை நிறுத்தும் நடைமுறை ஒன்றை வகுக்கும் நோக்குடன் கூட்டப்படும் இந்த மாநாட்டில் இந்திய - இலங்கை அதிகாரிகள் பங்குபற்றுவர்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் அதிகரித்துள்ளதையடுத்தே இந்த மாநாடு கூட்டப்பட இருக்கிறது. [ஐ-3]

உடுவில் பிரதேசசெயலக தமிழ்ப் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப. 10

உடுவில் பிரதேச செயலகம் நடத்தும் தமிழ்ப் புத்தாண்டு தினவிழா எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இதனை ஒட்டி நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு கிராமிய நடனப் போட்டிகளும், அனைவருக்குமான கவிதை கிராமிய நடனப் போட்டிகளும் முன்னர் அறிவிக்கப்பட்டவாறு இன்று திங்கட்கிழமை காலை 9மணி முதல் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

விளையாட்டுப் போட்டிகளும் இன்று காலை 9மணி முதல் ஆரம்பமாகும்.

* * *

வடபகுதிக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பும் விடயத்தில்

ஐ. தே. க அரசின் அசமந்தப் போக்கையே சந்திரிகாவின் அரசும் கடைப்பிடித்து வருகிறது

யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் உணவுப் பொருள்களை அனுப்பா விட்டால் அவர்கள் மண்ணைத்தான் தின்ன வேண்டி வரும்'' என்று வீரப்பிரதாபம் பேசிய முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேயதுங்காவின் ஆட்சியில் யாழ். மாவட்டத்துக்கு எந்த அளவான பொருள்கள் அனுப்பப்பட்டு வந்தனவோ அதே அளவு பொருள்கள் தான் இன்றைய ஆட்சிக் காலத்திலும் அனுப்பப்பட்டு வருகின்றன.

யாழ். செயலக புள்ளி விபரங்களில் இருந்து இந்த உண்மை அம்பலத்துக்கு வந்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஆட்சி ஏறிய போது 'தமிழ் மக்களுக்கு கடந்த அரசு அநீதிகள் விளைவித்தது' நாம் எம் சகோதரர்கள் போல அவர்களுக்கு எல்லாம் செய்வோம்'' என்று மார்தட்டி உரக்க கூறினார் அன்றைய பிரதமரும், இன்றைய ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க அம்மையார்.

யாழ் மக்களுக்கு பொருள்கள் தாராளமாக அனுப்பப்படுகின்றன. அவர்கள் தாரளமாக பொருள்களைப் பெற பொருளாதாரத் தடையை தளர்த்தியுள்ளோம் என்று உலகுக்கு பறைசாற்றிய சந்திரிகா அம்மையார் குடாநாட்டுக்கு எவ்வளவு பொருள்களை அனுப்பினார்?

கடந்த ஆட்சியிலும் பார்க்க கூடுதலான உணவுப் பொருள்களை அனுப்பினாரா?

தடைநீக்கப்பட்ட பொருள்கள் இங்கு தாராளமாகக் கிடைக்க என்ன செய்தார்?

1-2-94 முதல் 15-8-94 வரை
யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்த பொருள்கள்

அரிசி:-	9,244	மெற்றிக் தொன்
மா:-	18,225	மெற்றிக் தொன்
சீனி:-	5,551	மெற்றிக் தொன்
பால்மா:-	120	மெற்றிக் தொன்
பருப்பு;-	1,158	மெற்றிக் தொன்

இடர் பெயர்ந்த குடும்பங்கள்

யாழ் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2 லட்சத்து 41ஆயிரம் குடும்பங்களில் 56 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும், நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

தமது சொந்த இடங்களில் வீடு, வாசல்களை இழந்து எதிர்கால வாழ்க்கை இருள் மயமான— கேள்விக்குறியான நிலையில் வாழும் இந்த 56ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் கடமையாகும்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு ஏற்ப ''அகதி'' நிலையில் உள்ள மக்களுக்கு அரசாங்கம் உணவு, மருந்து வழங்க வேண்டியது நியதியாகும்.

சர்வதேச உலகம் வழங்கும் நிதியில் இருந்து இவர்களுக்கு மாதாமாதம் நிவாரணம் வழங்க வேண்டிய அரசு அதைக்கூட ஒழுங்காகச் செய்யவில்லை என்பது கடந்த காலத் தரவு [illegible] அறியக்கிடக்கிறது.

அவர்களுக்கான [illegible] கிரமமாக கப்பல்கள் மூலம் அரசு அனுப்பாததால் சில சமயங்களில் அவர்கள் மாதக் கணக்கில் நிவாரணம் இன்றி ப. நோ. கூ. சங்கங்களின் முன் தவம் இருக்கவேண்டிய நிலையும் ஏற்படுவதுண்டு.

இடம்பெயர்ந்த குடும்பங்களை தவிர்ந்த ஏனைய மக்களின் நிலை பெரிதும் கவலைக்குரியதொன்றாக மாறியுள்ளது.

குடாநாட்டில் இடம்பெயராத நிலையில் — தொழில் வசதியின்றி — ஒருலட்சத்து85 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன.

போதிய உணவுப் பொருள்களை அரசு அனுப்பாத காரணத்தால் இவர்கள் தமக்குத் தேவையான பொருள்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெறமுடிகிறது. போதிய பொருள்கள் செயலக கையிருப்பில் இல்லாத காரணத்தால் கள்ளமாக வரும் பொருள்களை அவர்கள் கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

-மாகவ ஆகன்-

இவ் வருட ஆரம்பத்தில் [illegible] தாக பதவியேற்ற அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம், யாழ். மாவட்ட மக்களின் தேவைகள் குறித்தும்—யாழ் மாவட்ட மக்களுக்கு மாதாந்தம் தேவையான 9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை 5 கப்பல்கள் மூலம் கொண்டு வருவது குறித்தும்— அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்திருந்தார்.

அரச அதிபரின் கணிப்பீட்டின் படி மாதாந்தம் 9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் குடாநாட்டு மக்களுக்குத் தேவை அரச அதிபரின் இந்தக் கணிப்பீட்டின் படி புதிய அரசு ஆட்சிக்கு வந்த ஒகஸ்ட் மாதம் முதல் கடந்த பெப்ரவரி மாதம் வரையான ஆறு மாதகாலப்பகுதிக்குள் யாழ் மாவட்டத்துக்கு 54 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் வந்து சேர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் அக்காலப்பகுதியில் யாழ் மாவட்டத்துக்கு வந்து சேர்ந்த பொருள்கள் 35 ஆயிரத்து 316 மெற்றிக் தொன் தான் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் [illegible] பெரிய அளவில் பொருள்கள் எடுத்துவர வசதி செய்யப்படவில்லை.

ஒகஸ்ட்டுக்கு முன்னர் கடந்த ஐ. தே. க ஆட்சிக் காலத்தில் 6 மாதகாலப் பகுதியில் 33ஆயிரத்து 20 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் குடாநாட்டுக்கு அனுப்பப் பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான பொருள்களில் அரைவாசியையே ஐ. தே க அரசு அனுப்பியது. அதே அளவு பொருள்களையே இன்றைய அரசும் அனுப்புகின்றது. (புள்ளி விபர அட்டவணைகளில் இதனைப் பார்க்கலாம்)

மக்களுக்கு ஏராளமான பொருள்களை அனுப்புகிறோம் என்று சர்வதேசத்துக்கு பிரசாரம் செய்யும் அரசு முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே நடந்து கொள்கிறது.

15-8-94 முதல் 28-2-95 வரை
யாழ். மாவட்டத்துக்க வந்துசேர்ந்த பொருள்கள்

அரிசி:-	6,950	மெற்றிக் தொன்
மா:-	21,124	மெற்றிக் தொன்
சீனி:-	7,242	மெற்றிக் தொன்
பால்மா:-	349	மெற்றிக் தொன்
பருப்பு:-	1,366	மெற்றிக் தொன்

உண்மையில் யாழ். மக்களில் அரசுக்கு அக்கறையிருந்தால் அவர்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்யும் வகையில் மாதாந்தம்9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்ப வேண்டும். அல்லது அவர்கள் கடந்த ஐந்து வருடங்களாக நம்பி வாழ்ந்த சுயபொருளாதாரத்தை கட்டி எழுப்ப வழி விடவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தமிழர்களின் விடயத்தில் கடந்த அரசு கடைப்பிடித்த அதே கொள்கைகளையே இன்றைய அரசும் கடைப்பிடிக்குமனால் தமிழ்மக்கள் தங்களின் தேவைகளைத் தாங்களே தீர்மானிக்கும் நிலைக்கு வருவது தவிர்க்க முடியாததாகி விடும்.

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஏழு நாட்கள் வளர்ச்சி அடைந்த புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. வி. குணபாகன், இல. 151, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [36149]

ஒன்றரை மாதம் நிரம்பிய பூச்சிஅகற்றிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இல. 222, தெல்லிப்பளை வீதி [வட்டு. (இந்துக் கல்லூரிக்கு அருகில்) சித்தன்கேணி. [36118]

இறக்குமதி செய்யப்பட்ட 'B' வெங்காய விதை விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல. 251, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36088]

மண்ணெய் விநியோகம்

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 12-4-95 காலை 10-00 மணி — 2-00 மணி வரை ஐந்து லீட்டர் வழங்கப்படும். தொடர்பு: மாணவர் அவை [36146]

செயலாளர் சேவைகள்

வரைதல் இருந்து தட்டச்சிட்டு அனுப்புதல் வரையான சகல கடிதத் தொடர்பு நிர்வாக முகாமைத்துவ ஆலோசனைகள், மொழிபெயர்ப்பு சேவைகளுக்கு (சீ வீ கே) கந்தையா சிவஞானம், செயலாளர் சேவைகள் 904/5, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம். [36142]

பயிற்சி வகுப்புக்கள்

கேக் ஐசிங் மாசினி அலங்காரம், சமையற் கலையும், உடை தயாரித்தலும், பூ அலங்காரமும், மணப்பெண் அலங்காரமும், Stocking Net, Facial ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: அனித்தா பயிற்சி நிலையம், பூநாறிமரத்தடி, கே.கே.எஸ். வீதி கொக்குவில் [36105]

கோழிக்குஞ்சு விற்பனை

Prima Lohmann White வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். [36132]

மணப்பெண் தேவை

படித்த செவ்வாய்க் குற்றமற்ற பூரட்டாதி (மீனராசி) நட்சத்திர சொந்த வியாபாரம் செய்யும் மகனுக்கு 30 வயதுக்குட்பட்ட படித்த, அழகான அரசாங்க உத்தியோகப் பெண் தேவை. சைவ போஜனம் விரும்பத்தக்கது. இல. 969, உதயன், மே/ப. [8470]

மணமகன் தேவை

37 வயதுடைய ரூபா 4 000/- மாத வருமானம் பெறும் பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. விவாகரத்துப் பெற்றோரும், தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சடிதமூலம் தொடர்பு: இல. 779, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [36148]

தவறிவிட்டது

4-4-95 காலை நல்லூருக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடையில் திருமண படநிழல் பிரதி (நெக்கடிவ்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஷகி சலூன் நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும் (சி 932)

வாழ்த்து மடல்கள்

புத்தாண்டு வாழ்த்து மடல்கள் இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும், சில்லறையாகவும். 94ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு: விலங்கியல் A/L பாஸ்பேப்பர் வர்த்தகம் நிதியியலும் வெளிவந்து விட்டது மச்மிலன், ஸ்ரீகாந், யாழ் நல்லூர். [சி-644]

கரபந்து மத்தியஸ்தர் பரீட்சை

யாழ். மாவட்ட கரபந்து மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும். ஆர்வமுள்ளவர்கள் பரீட்சையில் கலந்து கொள்ளலாம். (ஐ-14)

ரவி ராஜ் ஆடையகம் வழங்கும்

மாபெரும் மலிவு விற்பனை

- ✶ அனைத்து ஜவுளி வகைகளும்,
- ✶ றெடிமேட் வகைகளும்

08-04-1995 முதல் **14-04-1995** வரை மட்டும் நடைபெறும்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

ரவி ராஜ் ஆடையகம்

77, பெரியகடைவீதி, (சோதியாதெரு) யாழ்ப்பாணம். (சி-969)

நினைவில் நீங்கா
31 ஆம் நாள் நினைவலைகள்

திருமதி
சுப்பிரமணியம இரத்தினமணி

தோற்றம்: 25 — 09 — 1926
மறைவு: 11 — 03 — 1995

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், வாழ்விற்கு வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளி விளக்காய் ஒளி விட்டு சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியை முன்னிட்டு இன்று (10 - 04 - 1995) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—குடும்பத்தினர்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம் [36121]

புதிய மகிழ்ச்சி ஆடையகம்

உங்கள் அபிமான யாழ்நகர் வைரவர் கோயிலடி புடைவைக்கடை 10 ஆம் திகதி திங்கள் முதல் கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது

புதிய மகிழ்ச்சி ஆடையகம்
[நியூ ஹப்பி ரெக்ஸ்ற்]
சிறப்பு அங்காடி வரிசை,
யாழ்ப்பாணம். [சி/935]

கழிவு கான் அமைப்பு திட்டம்
கட்டம் - 1
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்களப் பிரதம பொறியியலாளரினால் 1995 ஆண்டு சித்திரை மாதம் 26 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் விவரம	மீளளிக்கப் படாத வைப்புப் பணம்	மீளளிக்கப் படும் வைப்புப் பணம்
கழிவு கான் அமைப்பு திட்டம் கட்டம் - I பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை (வாளி மலசல கூடங்களை நீர் அடைப்பு மலசல கூடங்களாக மாற்றி அமைத்தலும், பூர்த்தி செய்யப்படாது இருக்கும் கழிவு பொருள் சுத்திகரிக்கும் தொகுதியுடன் கழிவு கான்களை இணைத்தலும்)	500/-	3,500/-

ரூபா பத்து இலட்சத்திற்கு (10 00 000) அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு ICTAD ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவர்.

மேற்படி கேள்வி பத்திரங்களை 1995 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும் அத்துடன் விவரங்களை நிறைவேற்று பொறியியலாளரிடம் இருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம.

எந்திரி என். சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்-
வடமாகாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
10 - 04 - 1995 [சி-929]

நினைவலைகள்

சுரேஸ்குமார் யோகராசா
(லெப்., மெய்யப்பன்)
மறைவு: 11 — 11 — 1993

திருமதி
புவனேஸ்வரி யோகராசா
மறைவு: 10 — 04 — 1994

சேயின் பின்னே — தாயும் சென்றதனை
ஆறாத்துயருடன் நினைவு கூருகின்றோம்.

திரு. திருமதி சரஸ்வதி - சிவயோகன்
(பெரியப்பா, பெரியன்ரி),
மாமாமார், சித்தி, அத்தைமார்,
பிள்ளைகள், சகோதரர்கள்.

''முருக நிழல்'',
சுதுமலை வடக்கு மானிப்பாய் [36147]

மாணவருக்கான மேலதிக உணவு முத்திரைகள்
உடன் பெறுமாறு அறிவுறுத்து

யாழ். பிரதேச செயலக பகுதியில் இதுவரை மேலதிக உணவு முத்திரை பெறாத மாணவர்கள் உடன் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இம்முத்திரைகள் கிராம சேவையாளர் மூலமாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

முத்திரைகளுக்கு விண்ணப்பித்தும் முத்திரைகளை பெறாதவர்கள் கிராமசேவகர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. [இ-17]

முருகன் துணை

வெல்வில் சிவசுப்பிரமணிய தேவஸ்தான வழிபடுவோர் சபை
சங்கானை

அறநெறிநிலைய அரங்கின்
அங்குரார்ப்பண விழா

காலம்: இன்று **10 - 04 - 95** திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு
இடம் : வழிபடுவோர் சபையின் தலைமையகம் முருகமூர்த்தி வீதி, சங்கானை.

நிகழ்ச்சிகள்

- ★ தேவஸ்தானத்தில் இருந்து விசேட பூசையுடன் அரங்கத்திற்கு இறைபடங்கள் எடுத்து வருதல்
- ★ மங்கள விளக்கேற்றல்
  திரு. பொ. கனகரத்தினம் (நிம்மதி)
  திரு. பொ. நாராயணலிங்கம்
  (சபையின் போசகர்கள்)
- ★ இறை வணக்கம்:
- ★ அரங்கு அங்குரார்ப்பணம்
  திரு கா. சந்திரராசா அவர்கள்
  (பிரதேச செயலாளர்/மேலதிக அரசாங்க அதிபர் வலி - மேற்கு சங்கானை)
  - ★ வழிபடுவோர் சபையின் காரியாலய அங்குரார்ப்பணம்
    பேராசிரியர் அ. சண்முகதாஸ்
    (தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
  - ★ வழிபடுவோர் சபையின் இந்து சமய நூல்நிலைய அங்குரார்ப்பணம்
    திரு செ. விக்னராஜா அவர்கள் சார்பில்
    திரு. தர்மானந்தம்
- ★ திருவுருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்தல்
  திரு T. S. தம்பையா (உபதலைவர்)
  திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா (உப பொருளாளர்)
  திரு. தி சிவதெட்சணாமூர்த்தி
  [அ. நெ பாடசாலை பாடவிதான அதிபர்]
  திரு. செ. குணபாலசிங்கம்
  [அ. நெ பாடசாலை கல்வி ஆலோசகர்]
  திரு. S. சிவானந்தராசா
  [அ. நெ. பாடசாலை பண்ணிசை ஆசிரியர்]
- ★ மங்கள இசை
  கலாசூரி N. K. பத்மநாதன் குழுவினர்
  V. K. கானமூர்த்தி V. K பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
  தவில் வித்வான் வீராச்சாமி அவர்கள்
  அளவையூர் K. சந்திரன் குழுவினர்
- ★ தீப ஆராதனைகள்:
  பிரம்மஸ்ரீ சிவா பாலசுப்பிரமணியசர்மா
- ★ வரவேற்புரை:
  திரு. த. கோவிந்தசாமி [உபதலைவர்]
- ★ அமைதி வணக்கம்:
- ★ தலைமை உரை:
  திரு. செ. சிவன்நேசன் [தலைவர்]
- ★ அருளுரை:
  முத்தமிழ் குருமணி
  சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
- ★ ஆசியுரை:
  சிவாகம கிரியாரெத்தினம்
  சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள்
- ★ ஆசிச் செய்திகள்:
  சமயப் பெரியோர்கள்
- ★ சிறப்புரை:
  கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ்
- ★ மதிப்புரை:
  திரு. பொன். சுந்தரலிங்கம்
  [தலைவர், இளங்கலைஞர் மன்றம்]
- ★ விளக்க உரை:
  திரு. நா சந்திரமோகன்
  [சபையின் செயற்திட்ட ஆலோசகர்]
- ★ வாழ்த்துரை:
  திரு. வ. ஸ்ரீகாந்தன் [ஆசிரியர்]
  திரு. க. திரவியம் [பிரதம எழுதுநர்]
- ★ நன்றியுரை:
  திரு. சி. கந்தசாமி [செயலாளர்]
- ★ கலை, இசை, நிகழ்ச்சிகள்

சபையின் அங்கத்தவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் அனைவர்களும் வருகை புரிந்து விழாவினை சிறப்பிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு அனைவர்களையும் வருக வருக என வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி.

வெல்வில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான வழிபடுவோர் சபை.

சங்கானை.

விளம்பர அனுசரணை:
S. R. P. ஸ்ரோர்ஸ்
சங்கானை. [சி-936]

உதயன்
392/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

மூன்றுகளின் வரிசையில்...

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று நடைபெறுவதற்கு ஏற்பாடாகி உள்ளது. இருதரப்பாருக்கும் இடையேயான மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்று சுமார் மூன்று மாதங்களின் பின்னர் — மிக நீண்ட இடைவெளியின் பின்னர் — இன்றைய பேச்சு நடைபெறப் போகின்றது.

இன்றைய பேச்சுக்களில் கலந்து கொள்ளும் அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவில் புதிதாக மூவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முந்திய மூன்று பேச்சுவார்த்தைகளுக்கும் தலைமை வகித்து வந்த ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபென்டியே இன்றைய பேச்சுகளுக்கும் அரச தரப்பில் தலைமை வகிப்பார். எனினும், முன்னர் வந்த குழுக்களில் அங்கம் வகித்த ராஜன் ஆசிர்வாதம், நவீன் குணரத்னா ஆகியோருக்குப் பதிலாக அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ, கலாநிதி ஜெயதேவ உயங்கொட, சாள்ஸ் அபயசேகரா ஆகியோர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவில் ஆள்மாற்றம் செய்யப்பட்டாலும், உடனுக்குடன் முடிவுகளை எடுக்கக் கூடிய அதிகாரம் அதற்கு இருக்காது. நான்காம் சுட்டப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பில் அமைச்சர்கள் இருவர் இடம்பெறுவர் என்று முன்னர் பரவலாகப் பேசப்பட்டது. அமைச்சர்கள் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, லக்ஷ்மன் கதிர்காமர், அமரசிறி தொடங்கொட ஆகியோரில் இருவரோ அல்லது ஆகக் குறைந்தது ஒருவரேனும் வருவார் என்று வதந்திகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால்......

அமைச்சர்கள் இல்லாத, அதிகாரி தலைமையிலான, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நம்பிக்கையான அங்கத்தவர்களையும், இராணுவ நலன்கள் பாதிப்புறாமல் இருப்பதை நிச்சயப்படுத்தும் படை அதிகாரிகளையும் கொண்ட குழுவே அரச தரப்பில் இன்று இங்கு வரவுள்ளது.

ஏற்கனவே ஆராயப்பட்ட அன்றாடப் பிரச்சினைகளைப் புறந்தள்ளி, அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்கு அரசு விரும்பியதாலேயே நான்காம் கட்டப் பேச்சு இந்தளவு நீண்ட காலம் தடைப்பட்டது; இழுபட்டது. தனது முந்திய நிலைப்பாட்டை மாற்றி, அன்றாடப் பிரச்சினைகள், அவை சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகளைச் செயற்படுத்துதல் என்பன குறித்து ஆராய்வதற்கு அரசு இப்போதுமனங்கொண்டுள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

எரிபொருள் தடைநீக்கம், மீன்பிடித் தடையை முற்றாக நீக்குதல் ஆகிய முடிவுகளைச் சீரான முறையில் செயற்படுத்துவது குறித்தும்—

பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்திற்கு ஒரு பாதையைத் திறப்பது, கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதித்தல் ஆகிய தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்துமே — நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட வேண்டும்—என்று தமிழீழத்தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்த யோசனையை ஏற்றுக்கொண்டே அரசு மனம் மாறியிருக்கிறது.

சம்பந்தப்பட்ட விடயங்களில் முடிவு எடுக்கும் அதிகாரம் உடையவர்களையே அரச தூதுக்குழுவில் அனுப்ப வேண்டும் என்று தலைவர் பிரபாகரன் மார்ச் மாதம் 28ஆம் திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் யோசனை தெரிவித்திருந்தார்.

இன்று வரும் தூதுக்குழுவின் முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ள ஒருவரேனும் இல்லை. இங்கு பேசுபவர்கள் எதற்கும் கொழும்பில் உள்ளவர்களிடமே முடிவு கேட்க வேண்டும்.

ஆகையால் இன்றையபேச்சுவார்த்தை மூலம் திட்டவட்டமான முடிவுகள் கிடைக்குமா என்பது சந்தேகமே. முந்திய மூன்றுகளினதும் வரிசையில், வரும் நான்காவது பேச்சாகவே இதுவும் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

குடாநாட்டில் வன்செயல்களினால்

காணாமற்போன 2 ஆயிரம் பேரை இறந்தவர்களாக பதிவு செய்ய முடிவு

வலிகாமம் மேற்கு, ஏப். 10

யாழ். மாவட்டத்தில் வன்செயல்களின்போது காணாமற்போன சுமார் 2 ஆயிரம் பேரை இறந்தவர்களாக பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் யாழ். மாவட்ட பதிவாளரினால் துரிதகதியில் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒரு வருடத்துக்கு மேலாக காணாமல் போனவர்கள் இறந்தவர்களாக மாவட்ட பதிவாளர்களினால் தீவிர விசாரணையின் பின் பதிவு செய்யப்படலாம் என்ற சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டம் 6-1-95 இல் இருந்து இரண்டு வருடங்களுக்கு மட்டும் செல்லுபடியாகும். எனவே யாழ். மாவட்டத்தில் காணாமற்போனதாகக் கருதப்படும் சுமார் 2 ஆயிரம் பேரையும் இறந்தவர்களாகப் பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மாவட்ட பதிவாளர் துரிதகதியில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிய வந்தது. [ஐ-175]

பரீட்சைத் திகதி தெரியாது பயிற்சி ஆசிரியர் குழப்பம்

அச்சுவேலி, ஏப். 10

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சித்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான பரீட்சைகள் எப்போது நடைபெறும் என்பது தெரியாமல் பயிற்சி ஆசிரியர் அங்கலாய்க்கின்றனர்.

தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரியர்களுக்கான பகுதி I பரீட்சை இறுதிப்பரீட்சை ஆகியன முதலாம் தவணை விடுமுறையில் நடைபெறும் என முன்பு கூறப்பட்டது. ஆனால் பரீட்சை எந்தத்திகதியில் ஆரம்பமாகும் என்பதும் பரீட்சைக்குரிய நேர அட்டவணை என்ன என்பதும் தெரியாத நிலையில் பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர்.

இதுவரை திட்டவட்டமான திகதி எதுவும் தெரியாமல் இருப்பதால் பரீட்சைக்கு பொருத்தமான முறையில்தம்மைத் தயார் செய்ய முடியாமல் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். [ஐ-5-11]

சிங்களத்தில் சுற்றுநிருபம் தமிழ் ஆசிரியர்கள் கவலை

கொழும்பு, ஏப் 10

ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தமிழ் ஆசிரியர்கள் புகார் தெரிவிக்கின்றார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி உயர்த்தப்பட்ட சம்பள உயர்வு மே மாதத்தில் நடைமுறைக்கு வருவது தொடர்பான நடைமுறைகள் அடங்கிய சுற்று நிருபமே தனிச் சிங்கள மொழியில் இருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

பயிர்ச் செய்கை அலுவலர் பதவி மாற்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 10

கிராம உத்தியோகத்தர் சேவைக்கு மாற்றப்பட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள்,பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்களை மீண்டும் பழைய பதவிக்கு இம்மாதம் முதலாம்திகதி முதல் மாற்றும் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட கைத்தொழில் நாடாளுமன்ற அலுவல்கள் பொது நிர்வாக அமைச்சு இந்தத் திட்டத்தை மே மாதம் முதலாம் திகதியில் இருந்து செயற்படுத்துமாறு மாவட்ட அரச அதிபர்களுக்கு முன்னர் பணித்திருந்தது.

ஐக்கிய கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் மேற்படி திட்டத்தை செயற்படுத்தக் கூடாதென நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-3)

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் கண்டுபிடிப்பு

லண்டன், ஏப். 10

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மிச்சிக்கன் பல்கலைக்கழக விஞ்ஞானி தோமஸ் டொனக்கியூ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான அவரது ஆராய்ச்சிக் கட்டுரையை லண்டனில் இருந்து வெளிவரும் 'நேச்சர்' விஞ்ஞான சஞ்சிகை வெளியிட்டுள்ளது

பூமியில் நீர் திரவமாகவும், நீராவி உருவில் வாயுவாகவும், பனிக்கட்டி உருவில் திண்மமாகவும் உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தின் வடமுனையிலும், தென்முனையிலும் தரையின் கீழும் நீர் பனிக்கட்டி உருவில் நிறைய உள்ளது.

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பிலும் அதன் வளிமண்டலத்திலும் நீர் இல்லை என்று இதுவரை விஞ்ஞானிகள் கூறி வந்தது தவறு

இவ்வாறு அவர் தமது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார் [எ-4]

நோயாளர் நலன்புரி சங்கம் அன்பளிப்பு

நோயாளர் நலன் புரிசங்கம் இருவருக்கு முச்சக்கர வண்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கடந்த 3ஆம் திகதி சங்க நடுவப்பணியகத்தில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி சி. சிவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திட்டப் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் இவற்றை உரியவர்களிடம் வழங்கினார்.

இதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நடைபெற்ற வேறொரு நிகழ்வில் இருவருக்கு முச்சக்கரவண்டிகளும், மூவருக்கு மாதாந்த அடிப்படையிலான நிதியுதவியும் வேறு இருவருக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டன.

கடந்த 5ஆம் திகதி இடம் பெற்ற இந்நிகழ்வில் வர்த்தகர் திரு. அ.டானியல் மேற்படி மருத்துவமனை பிரதம இலிகிதர் திரு சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். [ஐ-14]

வன்னிப் பகுதியில் உள்ள

பறங்கியாற்றின் மேலதிகநீர் திசை திருப்பப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 8

வன்னி மாவட்டப் பகுதியிலுள்ள பறங்கியாற்றின் மேலதிக நீரை பாலி ஆற்றுக்கு திசை திருப்புவதற்கான நில அளவை வேலைகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியால் மேற்கொள்ளப்பட்டன.

பாலமோட்டை முதல் வவுனிக்குளம் வரை சுமார் ஆயிரம் அடி அகலத்தில் 25 மைல் தூரத்திற்கு வேலைகள் மதிப்பீடு செய்யப்பட்டு இதுவரை 15 மைல் தூரம் வரை வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த வேலையால் வவுனிக்குளம் வருடாவருடம் வான் பாயும் மட்டம் வரை நிரம்பவும் புதிய 25 [illegible] வரையில் [illegible] வாய்ப்பு [illegible] குறிப்பிடத்தக்கதாகும்.

அன்னை பூபதி நினைவாக சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப். 10

அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இன்று திங்கட்கிழமை சண்டிலிப்பாய்—சுதுமலை சந்தியிலுள்ள முகாமும் மல்லாகம் சந்தியிலுள்ள மாவீரர்களின் படங்களைச் சூழவுள்ள பகுதிகளும் சிரமதான முறையில் சுத்தம் செய்யப்படும்.

கெற்பெலி பண்டிதர் குடியிருப்பு, நாவற்குழி வவனிதா குடியிருப்பு ஆகிய இடங்களிலும் சிரமதான வேலைகள் இடம்பெறும். (ஐ-14)

கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு ஏப்.10

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான ஆங்கில பாடகற்பித்தல் முறை தொடர்பான கருத்தரங்கு நாளையும், நாளை மறுதினம் புதன்கிழமையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளணியினர் கலந்து கொள்வர். (14-152)

சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப். 10

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் சைவப்புலவர் பரீட்சை எதிர் வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென சங்கச் செயலாளர் தெரிவித்தார். [ஐ-14]

புலிகளின் குரல் வானொலியில்

10 — 04 — 1995

திங்கள் இரவு

- ★ 8-02 — தளிர்கள்—சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்—யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீட விரிவுரையாளர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் அவர்களுடனான செவ்வி

11 — 04 — 1995

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

தமிழீழ வானொலி ஒலிபரப்பு

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15—ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்கு சிலவிநாடிகள்
- ★ 6-02 — நேசர் நெஞ்சம்
- ★ [illegible] செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

விளக்கு சஞ்சிகை வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஏப். 10

விளக்கு சஞ்சிகையின் மாசி மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் பா. தனபாலன் எழுதிய ''ஆசிரியரும் முகாமைத்துவமும்'', கி. நடராசா எழுதிய ''கல்வியின் நோக்கம்'', கலாநிதி சிறிசற்குணராசாவின் ''தூண்டப்பட வேண்டிய மனச் செய்கைகள்'' ஆகியன உட்பட பல கட்டுரைகளும் சிறப்பம்சங்களும் இடம் பெற்றுள்ளன. (5-14]

புத்தாண்டை ஒட்டி

கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 10

புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி கொழும்பில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புத்தாண்டுக்கு பொருள்கள் வாங்க தலைநகர் வரும் மக்களை பாதுகாக்கவும்—

அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம்பெறாமல் தடுக்கவும்— கூடுதல் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். [எ-3]

கடல் தொழிலாளருக்கு ஊக்குவிப்பு கடன் உதவி

யாழ்ப்பாணம், ஏப் 10

மன்னார் மாவட்டம், முழங்காவில் வட்டம், பள்ளிக்குடா கிராமத்தைச் சேர்ந்த 20 கடற்றொழிலாளர்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஊக்குவிப்புக் கடன்களை வழங்கியுள்ளனர்.

அண்மையில் நாச்சிக்குடா செயலக பணிமனையில் வைத்து நடாத்தப்பட்ட இக் கடன் வழங்கு வைபவத்தில் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றி, கிராமிய நிதிய பொதுமுகாமையாளர் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட பெருமளவான கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழத்தில் பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கிராமிய நிதிய கடன் திட்டத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் இதுவரை 2 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது [ஐ-5]

இன்றைய இசையரங்கில்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். வண்ணை காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெற்றுவரும் ஸ்ரீகாமாட்சி இசை அரங்கு நிகழ்வில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30மணிக்கு பிரம்மஸ்ரீ எஸ். சர்வேஸ்வரசர்மா, திரு. அ. ஜெயராமன் ஆகியோரின் வயலின் சோலோ இடம் பெறும். [ஐ-14]

★ ★ ★

நல்லூர் பண்டாரக் குளம் மருதவளவு ஸ்ரீவிநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலய தர்மகர்த்தா சபையும் யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றமும் இணைந்து வழங்கும் தெய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு சுகன்யா சிவானந்தனின் பாட்டும், 8-45 மணிக்கு பாக்கியலட்சுமி நடராசாவின் வயலினிசையும் இடம் பெறும். [ஐ-14-111]

ஆலயங்களில்

கந்தர்மடம் செல்வநாகபூஷணி அம்பாள் ஆலய பங்குனித்திங்கள் திருவிழா இன்று நடைபெறும். பகலில் பொங்கல் பூசையும் இரவு சுவாமி வீதியுலா வருதலும் இடம் பெறும், இரவு 9.30 மணிக்கு கனகசபாபதி நாகேஸ்வரனின் ''நவசக்தி தத்துவம்'' இன்னிசை சொற்பொழிவும் இடம் பெறும்.

சுற்றறிக்கை தமிழிலும்

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு—கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள சுகாதார சேவைகள் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள் இனிமேல் தமிழிலும் அனுப்பப்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதுவரை இச்சுற்றிக்கைகள் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்பட்டு வந்தன.

இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

இத்தகைய சிரமங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, கடந்த 21 ஆம் திகதி யாழ். பிராந்திய சுகாதார தொற்றுவியலாளர் டாக்டர் திரு. சிவபாதம், சுகாதார அமைச்சரை கொழும்பில் சந்தித்து உரையாடினார்.

சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்தில்' வருவதனால் ஏற்படும் சிரமங்களை எடுத்து விளக்கியதை அடுத்து இனிமேல் தமிழிலும் இவ் அறிக்கைகளை அனுப்புவதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

மேலும் கடந்த பல வருடங்களாக வடபகுதிக்கு புதிய அம்புலன்ஸ் வாகனமோ அல்லது அதற்கான உபகரணங்களோ வழங்கப்படாதது பற்றியும் இச் சந்திப்பின் போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

தங்களிடம் தற்போது அம்புலன்ஸ்வாகனம் இல்லாதிருப்பதால் தங்களுக்கு வரவிருக்கும் அம்புலன்ஸ் வாகனங்களில் தேவையைப்பொறுத்து வடபகுதிக்கும் அவற்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார். [இ-5-15]

சமாதான முயற்சிகளுக்கு ரஷ்ய கூட்டமைப்பு ஆதரவு

கொழும்பு, ஏப். 10

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ரஷ்யக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க முன் வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் மாஸ்கோவில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யக் கூட்டமைப்பு பிரதி வெளிவிவகார அமைச்சர் அண்மையில் இலங்கை விஜயம் செய்து நிலைமையை அவதானித்து நாடு திரும்பிய பின்னர் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-3)

மனித தெய்வமாக கண்முன் நடமாடிய சீவன்முத்தர் யோகர் சுவாமிகள்

இன்று அவரது குருபூசைதினம்

நமது தமிழீழத்திலே சிவன் முத்தராக வாழ்ந்து 1964 ஆம் ஆண்டு சிவபதமடைந்த யோகர் சுவாமிகளை நினைவு கூருவது பெரும் தவப்பேறாகும்.

சுவாமிகள் ஒரு நடமாடும் தெய்வமாக நம் நாட்டில் காட்சியளித்தவர். வாழ்வின் முற்பகுதியை அரசாங்க உத்தியோகத்தில் கழித்த போதிலும் ஓய்வு நேரத்தைத் தியானத்திலும் மௌனத்திலும் செலவு செய்தார்.

இக்காலத்திலே தான் நல்லூர்த் தேர் மண்டபத்தில் தம் குரு செல்லப்பாசுவாமிகளைக் கண்டு உபதேசம் பெற்றார். ''ஆரடா நீ'' ''தேரடாவுன்'' ''தீரடா பற்று'' ''தேரடாபற்று'' முதலிய குருவின் வார்த்தைகள் இவரது வாழ்க்கைப் போக்கையே திருப்பிவிட்டன. செல்லப்பாச்சுவாமிகளையே தம் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமாகக் கொண்டு அவர்களுக்கே மீளா அடிமையானார்.

யாழ்ப்பாணமும் கொழும்புத்துறையும் செய்த தவப்பயனால் நீண்ட காலம் எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக எம்முடன் வாழ்ந்தார்.

நல்லூர்ப் பதியில் குரு தரிசனம் பெற்றவராகையால் அப்பதியைக் குறித்து அதிகமான ''நற்சிந்தனைப்'' பாடல்கள் பாடியுள்ளார். பாடல்கள் முழுவதிலும் வேதாந்த சித்தாந்தக் கருத்துகள் நிறைந்து மிளிர்கின்றன. இலகுவான முறையில் இறைவனை உணர வைக்கும் திறனை இவர்களது ஞான மொழிகளில் காணலாம். ''எதை நீ பாவனை செய்கின்றாயோ அது நீ யாவாய்'' என்பதும், ''ஒரு பொல்லாப்புமில்லை'' ''எப்பவோ முடிந்த காரியம்'', ''நாமறியோம்'' ''முழுதும் உண்மை'' போன்ற இவரது அருளுரைகளும், என்றும் சிந்திக்கச் சிந்திக்கத் தெவிட்டாதவை. இவர் 'சிவதொண்டன்' என்னும் மாத இதழ் மூலம் மக்களது கருத்துகளுக்கு நல்விருந்தளித்தார்.

தம்மைத் தரிசிக்க வருவோருக்கு உபதேசம் செய்வதும் அவர்களுடைய சந்தேகங்களை தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் அவர் கடமையாக இருந்தது. இவர் பாடிய ''நற்சிந்தனைப் பாடல்'' நூல் ஒவ்வொருவர் இல்லங்களிலும் இருக்க வேண்டிய பொக்கிசமாகும்.

சிவயோகியாகியும், சிவஞானியாயும், சீவன் முத்தராயும் விளங்கிய சிவயோக சுவாமிகள் தக்கருமங்கள் செய்து, போதிக்க வேண்டிய நற்போதனைகளெல்லாம் போதித்து, கலங்கரை விளக்காக எமக்கெல்லாம் வழிகாட்டிய அவரது கருணையை நாம் மறக்கலாகாது. அவர் இறைபதமடைந்த பங்குனி ஆயிலிய தினத்தில் குருபூசை செய்து வழிபடுவது எமது தலையான கடமையாகும். சுவாமிகள் நமக்குக் காட்டிய வழியைப் பின்பற்றி உய்தியடைவோமாக.

— பா. நந்தகுமார்

அன்னை பூபதி நினைவு நாள்கள் தமிழீழம்" எங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

தியாகி அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவுநாள்கள் தமிழீழப் பிரதேசங்கள் எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்குடா நாட்டிலும், வன்னி பெரு நிலப்பரப்பிலும் சிரமதானப் பணிகள் நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

முக்கிய இடங்களில் அழகுப் பந்தல்களில் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு அதற்கு மக்கள் மலரஞ்சலி செய்து வருகின்றனர். முக்கிய சந்திகளில் ஒலி பெருக்கிகள் மூலம் அன்னை பூபதி நினைவுப் பாடல்கள் ஒலிக்கப்பட்டு வருகின்றன.

அன்னை பூபதி நினைவு நாள்கள் இம்முறை தென்தமிழீழத்திலும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. (ஐ-7)

மரத்தால் தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 10

கள் இறக்குவதற்காக தென்னை மரத்தில் ஏறிய தொழிலாளி ஒருவர் தவறிக் கீழே விழுந்து உயிரிழந்தார்.

புத்தூர் கிழக்கு செக்கத்திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த மு. சின்னவன் (வயது 52 என்பவரே மரணமானவராவார்.

மரத்தால் விழுந்து படுகாயமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய சில மணிநேரத்தில் அங்கு மரணமானார். (ஐ-15)

மாணவர் அமைப்பின் கலைநிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 10

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை, பண்பாட்டு அவையின் ஏற்பாட்டில் ''கலைப்பூங்கா – ஒன்று'' என்னும் கலைநிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த கலைநிகழ்ச்சிகள் இந்நிகழ்வில் இடம்பெறும். மாணவர்களின் கலை ஆர்வத்தை வளர்க்கும் நோக்குடன்—

இந்த நிகழ்வு மாதாந்தம் நடத்தப்படும் என்று விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பின் கலை பண்பாட்டு அவை தெரிவித்துள்ளது. [ஐ-3]

ஜனசக்தி வங்கி கொள்ளை: தப்பியோடிய சிப்பாய் கைது!

கொழும்பு, ஏப் 10

தில்ஸமகராம ஜனசக்தி வங்கியில் கடந்த 3 ஆம் திகதி நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரும், இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்

விசேட பொலீஸ் குழு மேற்கொண்ட விசாரணையின் பின் அவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் 33 ஆயிரம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது (ஐ-3-6)

உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்துக்கு

ஜனாதிபதி தலைமையில் குழு 23 இல் புறப்படும்

எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான குழு எதிர்வரும் 23 ஆம் திகதி இங்கிருந்து பயணமாகவிருக்கிறது

ஜனாதிபதியுடன் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், திறைசேரியின் செயலாளர் கே. எஸ் ஐயரத்தின ஆகியோரும் செல்கின்றனர்.

1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பாரிஸில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் இந்த முறையே இக்கூட்டம் நடைபெறுவதும் —

நாட்டின் தலைவர் கூட்டத்தில் முதன் முறையாக கலந்து கொள்வதும் — குறிப்பிடத்தக்கவை. (ஐ-3)

பட்டப்பின் டிப்ளோமா விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 10

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பரீட்சைக்கான முதலாம், இரண்டாம் வருடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து நாளையும்—

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியில் வைத்து நாளை மறுதினமும்— பூர்த்தியாக்கப்படவுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு தி. கமலநாதன் அறிவித்துள்ளார். (ஐ-3)

குவைத்தில் இலங்கையர் தற்கொலை அதிகரிப்பு

கொழும்பு ஏப்ரல். 10

குவைத்தில் தொழில் புரியும் இலங்கையர்களில் வருடாந்தம் ஆறு அல்லது ஏழு பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ இத்தகவலைத் தெரிவித்தார்.

தமது குவைத் விஜயத்தின் போது இது பற்றி தாம் அறிந்து கொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு தாயகம் திரும்பியுள்ள அமைச்சர் தமது விஜயத்தின் மூலம் இலங்கையர்களுக்கு கூடிய தொழில் வாய்ப்பினைப் பெற முடிந்ததாகவும் தெரிவித்தார் (ஐ-5)

சிப்பாய்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு தாக்கப்படும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

– இவ்வாறு புலிகளின் குரல் வானொலி மேலும் தெரிவித்தது. (ஐ-7)

எதிர்க்கட்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதனால் அவர்கள் விரக்தி நிலையை அடைந்துள்ளனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் இருந்த நிலையும், இன்றுள்ள நிலையும் ஒன்றல்ல, இரண்டும் வெவ்வேறான நிலைகள்.

இரவில் படிக்க மின் வெளிச்சம் இல்லை: போக்குவரத்துக்கு உரிய வசதிகள் இல்லை.

தூர இடங்களில் உள்ள மாணவர்கள் கால் நடையாகவும், சைக்கிள்களிலுமே பாடசாலைக்குச் செல்ல வேண்டி உள்ளது

இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் படித்தும், வெட்டுப் புள்ளி முறை எமது கல்வி முன்னேற்றத்தை பாதிக்கிறது

இவ்வாறு மாணவர் பிரதிநிதிகள் எதிர்க்கட்சி எம். பிக்களுக்கு எடுத்து விளக்கினர்.

பேச்சுக்களின் உண்மை நிலையை அரசு தெளிவுபடுத்த வேண்டும்

சபையில் எதிர்க்கட்சி எம். பி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையின் உண்மைநிலை என்ன என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட எம். பியான திலக் கருணாரத்தின முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தை எதிர்க்கட்சிகளின் சார்பில் ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

வெளிநாட்டு மத்தியஸ்தர்கள் செயற்படுவதற்கு அனுமதி அளிக்க விடுதலைப் புலிகள் மறுக்கிறார்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பூனை – எலி விளையாட்டே நடைபெறுகிறது, உண்மை நிலவரத்தை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும். பிரபாகரன் ஜனநாயக வழிக்கு வருவார் என நீங்கள் நினைக்கிறீர்களா? புலிகள் பங்கர்களை வெட்டுகிறார்கள். அதை ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் — என்றார்.

அச்சமயம் குறுக்கிட்டுப் பேசிய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்—

அந்தப் பகுதிக்கு கமெராவுடன் சென்று வேண்டுமானால் படம் எடுத்து வாருங்கள் என்றார்.

அதற்குப் பதிலளித்த திலக் கருணாரத்ன — புலிகளிடம் விஸா எடுத்து அங்கு போக வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றார். (ஐ-5)

மொறிஷியஸில் வேலை வாய்ப்பு]

கொழும்பு, ஏப். 10

மொறிஷியஸ் தீவில் இலங்கையைச் சேர்ந்த திறமையான ஊழியர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இருப்பதாக இலங்கையில் உள்ள மொறிஷியஸ் கவுன்சிலர் திரு. தெ ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அங்கு 10 இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர் என்றும்—

கணக்கியல், கணனியியல், மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளில் இலங்கையர் தொழில் பெற அங்கு வாய்ப்பு உண்டு என்றும்— அவர் தெரிவித்தார். (ஐ-3)

காலையும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. எஸ் டொமினிக் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ஆர் ரவி ஆகியோர் பங்கு பற்றுவர்.

எரிபொருள், மீன்பிடித் தடை நீக்க நடைமுறைகள் குறித்தும் —

பூநகரி முகாமை அகற்றி பாதை திறத்தல், கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுதல் குறித்தும் — இன்றைய பேச்சில் ஆராயப்படும் என்று தெரிய வருகிறது

இம்முறை, முன்னரைப் போல வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வர மாட்டார்கள் என்றும்—

ஒரு சில செய்தியாளர்கள் மட்டுமே அரச குழுவினருடன் வருவர் என்றும் தெரியவந்தது. (அ-3-7)

காஸாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தனர்.

இந்த கார்குண்டு தாக்குதல் ஒரு தற்கொலைத் தாக்குதல் என இஸ்ரேல் அறிவித்துள்ளது. இத்தாக்குதல் சம்பவத்திற்கு முஸ்லிம் தீவிரவாத அமைப்பான 'ஜிகாத்' அமைப்பு உரிமை கோரியுள்ளது. (ஐ-7)

ஜே. வி. பியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

1971 ஆம் ஆண்டில் நாம் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடினோம்.

அந்தக் கிளர்ச்சி தோல்வியடைந்ததாக சிலர் விமர்சித்தாலும், உண்மையில் அது தோல்வியடையவில்லை.

அதே போன்றே — றோஹண விஜேவீர, உபதிஸ கமநாயக்க போன்ற எமது உறுப்பினர்கள் ஐ தே. கட்சியினரால் கொல்லப்பட்டனர்.

அவர்கள் கொல்லப்பட்டதும் எமது கட்சியும் அழிக்கப்பட்டுவிட்டதாகப் பலர் கருதினர்; எனினும் கட்சி அழிந்துவிடவில்லை.

அவர்கள் காட்டிய பாதையில் நாம் சவால்களை எதிர்த்து முன்செல்கிறோம்.

ஆட்சியாளர்கள் எம்மை அடக்கி ஒடுக்க முனைந்தால் நாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிரைத் தியாகம் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் அங்கு தெரிவித்தார்

கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி, அஜித் குமார ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியில் பலியானோர் கூட்டத்தில் நினைவு கூரப்பட்டனர். (ஐ-5)

மரண அறிவித்தல்கள்

திருமதி
கந்தையா அமுதாம்பிகை திரவியம்

சண்டிலிப்பாய், கீரிமலை வீதியைச் சேர்ந்த கந்தையா அமுதாம்பிகை திரவியம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கந்தையாவின் அன்பு மனைவியும், இராஜமணியினதும், டாக்டர் சண்முகநாதனதும் (U. K.) அருமைத் தாயாரும், டாக்டர் விஸ்வநாதனதும் ஜோதி அப்பாளினதும் மாமியாரும், சிறிஸ்காந்தா [கனடா], சிறிகணேசன் [ஆபிரிக்கா], சிறிகிருஸ்ணா [U.K], சிறிதேவி [U K], சிறிவள்ளி [ஆபிரிக்கா], யோகநாதன், சாரதாதேவி, யசோதரா, சுபத்திரா, சுதர்சன் [U K], இராஜமோகன் [ஆபிரிக்கா], சாந்தினி [ஆபிரிக்கா], ராணி, சாந்தி [U K] ஆகியோரின் பேர்த்தியாரும், ராஜீவ் லக்சிக்கா, கோபிகா, மிதுன், துளசி அபிராமி [ஆபிரிக்கா] ஜேனி, பிரதீப், பிரசாத், பிரதீஸ், [U K] ஆர்த்தி ஆகியோரின் பீட்டியும் ஆவார்

இறுதிக் கிரியைகள் இன்று (10-04-95) காலை 10மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாவிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்;
Dr. T. விஸ்வநாதன்.
(மருமகன்)

கீரிமலை வீதி,
சண்டிலிப்பாய்.

[36143]

திருமதி திலகவதி கனகசபை

பொன்னாலையைச் சேர்ந்த திருமதி திலகவதி கனகசபை அவர்கள் அவுஸ்திரேலியாவில் காலமானார்.

இவர் கனகசபையின் அன்புமனைவியும் திருமதி கோ. ஜெயந்தி, திருமதி அ ஆனந்தி (ஜேர்மனி), அருளன் [பிரபு - அவுஸ்திரேலியா] ஆகியோரின் பாசமிகு தாயாரும், க கோபால் (ஈழநாடு), அருமைத்துரை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தன், கீதாஞ்சலி, ரஜிதா, விதுரா, சரண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், திருமதி க. கண்மணியின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல்;
சி கனகசபை
(கணவர்)

[36159)

சின்னத்தம்பி மகாராஜா
[மகான் மாஸ்டர்]
[ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்]

சாவகச்சேரி – மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நுணாவில் மேற்கு கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான சின்னத்தம்பி மகாராஜா 8.4.95 இல் காலமானார்.

இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், மகாசிவம் (பொறியியலாளர் கண்டி), மகாஜெபம் (சுவீடன்), மகாசெபம் (சுவீடன்), காலஞ்சென்ற மகாசெல்வம், மற்றும் மகாநுஜம் (கனடா], திருமதி மகாரஞ்சிதம் (கனடா), திருமதி மகாபுஸ்பம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓய்வு பெற்ற கனிஷ்ட அதிபர் திருமதி சிவபாக்கியம் சிவலிங்கம் (அவுஸ்திரேலியா), ஓய்வுபெற்ற அதிபர் சி. வீரகத்தி, காலஞ்சென்ற டாக்டர் தங்கராசா (பண்டத்தரிப்பு), ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நேசம் செல்லையா, ஓய்வுபெற்ற விஞ்ஞானப் பட்டதாரி - டாக்டர் [illegible] நடராஜா, ஓய்வு பெற்ற அதிபர் செல்வி. தேவமணி சின்னத்தம்பி (நாவலப்பிட்டி), ஓய்வு பெற்ற அதிபர் செல்வி இராசமணி சின்னத்தம்பி (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்

அன்னாரின் பூதவுடல் 12 04. 95 புதன்கிழமை காலை 10 மணிக்கு நுணாவில் காந்தாளம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சே. வேலாயுதம்
(மைத்துனர்)

கோவில் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

(36155)

சபாபதிப்பிள்ளை அப்பாப்பிள்ளை

சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை அப்பாப்பிள்ளை நேற்றுக் காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், ஏகாம்பரம் [திருப்பதி], செல்வக்குமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை செல்லையா, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரரும், கந்தையா, சரஸ்வதி, அப்புத்துரை ஆகியோரின் மைத்துனரும், சாவித்திரி தேவி, வசந்தா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-4 95) பிற்பகல் 2 மணியளவில் விளாவெளி இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் தயவாக வேண்டிக் கொள்ளுகிறோம்.

தகவல் :
அ. ஏகாம்பரம்
(மகன்)

[36156]

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
14
—
12
—
1949

உதிர்வு:
10
—
04
—
1993

அமரர் கந்தையா புவனேந்திரன்

எரிகின்ற தீபமே!
உம உடல் அணைந்து
இன்று ஆண்டுகள் இரண்டு
ஆனால், உம் உயிர்த் தீபம்
எம் பிரிய மக்களுடன்
ஒளி ஏற்றி வாழுகின்றது
வழி காட்டி, எமை வாழ வைக்கின்றது.

மக்களுயிர் காத்த போது
தூசு என உம்முயிரைப் பார்த்தீரே
தொண்டுகளைச் செய்ய துடிதுடித்தீரே
கண்டு மனம் களி கொண்ட இறைவன்
மக்கள் சேவையே மகேசன் சேவை என்று
மகிழ்ந்து உமை அழைத்தனையோ
உம் சாந்திக்கு என்றும் உருகுகின்றோம்.

மனைவி, மகள்,
மகன்.

91/5, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[36127]

மரண அறிவித்தல்

திருமதி
பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி

அரியாலையைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி நேற்றுக் காலமானார்.

இவர் டாக்டர் முத்துக்குமாரசாமியின் (ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராஜசூரியர் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திருமதி சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், விமலேந்திரன், மோகனச்சந்திரா, சிவநேசன், கமலா ஸ்ரீகரன், கிரிஜா, ஜெயந்தி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சரஸ்வதி அருளம்பலம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், டாக்டர் அருளம்பலம், சுப்பிரமணியம், மகேஸ்வரி-விஸ்வநாதன், மகாதேவா, மகேஸ்வரி - இரகுநாதன், கமலாம்பிகை - பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சிந்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஸ்ரீதரன்
[மருமகன் -மல்டி மார்க்கற், அரியாலை]

31/3, செட்டித்தெரு,
நல்லூர்.

(36157)

மருத்துவக்கண்காட்சி - 1995

தற்பொழுது நடைபெறும் மருத்துவக் கண்காட்சி பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும், நேற்று ஞாயிற்றுக்கிழமை வந்தவர்களைத் திருப்பி அனுப்பவேண்டி இருந்ததாலும், இககண்காட்சி மேலும் இரு நாட்களுக்கு (10-04-1995, 11-04-1995) இன்றும் நாளையும் நீடிக்கப்பட்டுள்ளதை அனைவருக்கும் தெரியத்தருகின்றோம்.

கண்காட்சிக்குழு

(36153)

இப்பத்திரிகை [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 393/3 இலக்கத்திலுள்ள [illegible] 11-04-1995 இல் [illegible]